# மாத முடிவுக்குள் மின்சார நிலைய காணி சுவீகரிக்கப்படும்?

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

காரியாலயம் யாழ்ப்பாணம், 49 மலர் 10
போன் 339 இதழ் 199
National Tamil Daily தேசிய தினசரி

சாதாரணவருடம் ஆவணி 12 ஹி ஆகி 8 புதன்கிழமை (28-8-68)

நல்லூர், செவ்வாய்
யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான மின்சார நிலையக் காணியை புதிய வெளிநோயாளர் சிகிச்சை நிலையம் கட்டுவதற்காக சுகாதார அமைச்சு இம்மாத முடிவுக்குள் பொறுப்பேற்கும் என்றும் இதற்கான 'கஸட்' அறிவித்தல் ஒன்று இம்மாதம் 29-ம் திகதி வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மாநகரசபை முன்னாள் அங்கத்தவர்களினதும், ஆணையாளர்களினதும், சில எதிர்ப்பு நியாயங்களை நிராகரித்த சுகாதார அமைச்சர், உடனடியாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வெளிநோயாளர் நிலையத்தை அமைக்க வேண்டிய நிலத்தை யாழ்ப்பாணம் மாநகரசபையிடமிருந்து அபகரிக்கும்படி உத்தரவிட்டிருப்பதாகவும் அறியப்படுகின்றது.

புதிய மாநகரசபை கைமேற்ற தெரிவுப்பட்ட அங்கத்தவர்கள் ஆட்சிவரை இதனை ஒத்திவைக்கும்படி கேட்கப்பட்ட கோரிக்கையையும் சுகாதார அமைச்சு முற்றாக நிராகரித்துள்ளதாகத் தெரிகின்

[6-ம் பக்கம் பார்க்க]

மாஸ்கோவிலிருந்து திரும்பிய

# செக். தலைவர்களுக்கு மக்கள் பெரும் வரவேற்பு

## தேவாலய மணிகள் ஒலித்தன; சங்க நாதம் முழங்கின

### அந்நிய படைகள் படிப்படியாக விலகும்

பிராக், ஆக. 27

**மாஸ்கோவில் 4 நாள் பேச்சுவார்த்தைகளை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பிய செக்கோஸ்லாவாக்கிய ஜனாதிபதி ஸ்வபோடா, செக். நாட்டு கம்யூனிஸ்ட்கட்சித்தலைவர் திரு. டுப்ஜெக், பிரதமர் திரு. ஜெரனிக் ஆகியோருக்கு இன்று செக்கோஸ்லாவாக்கிய தலைநகரான பிராக்கில் பெரும் வரவேற்பளிக்கப்பட்டது.**

பல்லாயிரக்கணக்கான மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து அவர்களை வரவேற்றனர். வீதியெங்கும் மக்கள் திரண்டு நிமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டனர். தலைவர்கள் வந்திறங்கியபோது தேவாலயங்களின் மணிகள் ஓயாது ஒலித்தன. சங்கநாதம் முழங்கியது.

பெரும் ஆரவாரத்தோடு தம்மை வரவேற்ற மக்களுக்கு தலைவர்கள் நன்றி

[6-ம் பக்கம் பார்க்க]

## உலகில் தோன்றியுள்ள புதிய ஏகாதிபத்தியம்

### பிரதமர் டட்லி எச்சரிக்கை

கொழும்பு, செவ்.
"உலகில் உருவாகிவரும் புதிய ஏகாதிபத்தியத்திலிருந்து எமது நாட்டைப் பாதுகாக்க நாம் அனைவரும் ஒன்று சேர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது."

பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

மார்க்ஸிய எதிர்ப்பு முஸ்லிம் ஐக்கிய முன்னணியின் ஆதரவில் நடைபெற்ற கூட்டத்தில் டட்லி சேனநாயகா மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:-

ரஷ்ய தலைவர்கள் செக். நாட்டுடன் பேச்சுவார்த்தை நடாத்திவிட்டு திடீரென யாருக்குந்தெரியாமல் தலைவர்களை எடுத்துச்சென்று நாக்குத்தலை நடாத்தினர். கூட்டரசாங்கம் இங்கு ஆட்சிக்கு வந்ததால், இந்த ஏகாதிபத்தியத்துக்கு எமது நாடும் ஆளாகவேண்டி ஏற்படும்.

தம்மை ஜனநாயகவாதிகள் என்று கூறித்திரியும் இலங்கை மாஸ்கோ சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியினர் இதனைக் கண்டிக்கமுடியாமல் தடுமாறுவதிலிருந்து அவர்களின் ஜனநாயகம் புலப்படுகின்றதென்றும் பிரதமர் இங்கு முக்கியமாகக்குறிப்பிட்டார்.

### தோட்டங்களில் களவு

சழிபுரம், செவ்.
சித்தன்கேணி கிராமத்துக்கு அருகாமையாகவுள்ள தோட்டங்களிலுள்ள காய்கறி, கிழங்கு வகைகள் அடிக்கடி களவுபோகின்றனவாம். கடந்த இரவும் மரவள்ளித் தோட்டமொன்றில் இவ்வாறான களவு நடைபெற்றுள்ளதாம்.

## அவசர காலச் சட்டம் விரைவில் நீங்கும்

### பிரதமர் அறிவிப்பு

கொழும்பு, செவ்வாய்
அவசரகாலச் சட்டம் விரைவில் வாபஸ்பெறப்படுமென பிரதமர் திரு. டட்லிசேனநாயகா தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத் திட்டக் கமிட்டி நிலையில் பரிசீலனை செய்யப்பட்டபோதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

நாணயமதிப்புக் குறைப்பு வழி, சகல தொழிலாளருக்கும் கிடைக்க வகைசெய்யும் மசோதாவும் கூட்டுறவு இலாகாவில் நிலவி வரும் ஊழல்களை தடுக்கவகை செய்யும்மசோதாவும் நிறைவேற்றப்பட்டபின்னர் அவசரகாலச் சட்டத்தை வாபஸ் பெற உத்தேசிக்கப்பட்டிருப்பதாகத்தெரிவித்த பிரதமர் இவற்றை நிறைவேற்ற எல்லோரும் ஒத்து

(6ம் பக்கம் பார்க்க)

காந்தி ஜயந்தி நூற்றாண்டு நினைவாக

# வடக்கில் இரண்டு பெரிய சிரமதான திட்டங்கள்

## காந்திய சேவா சங்கம் ஆலோசனை

யாழ்ப்பாணம், செவ்வாய்

**அகில இலங்கை காந்திய சேவா சங்கத்தினர் இவ்வருடத்தில் இரண்டு புரட்சிகரமான சிரமதானத்திட்டங்களை நிறைவேற்றவிருக்கிறார்கள். இதுசம்பந்தமான மகஜர் ஒன்றை சங்கப் பொதுச்செயலாளரான திரு. சி. க. வேலாயுதபிள்ளை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகராவுக்கு நேற்று அனுப்பி வைத்துள்ளார்.**

எதிர்வரும் அக்டோபர் மாதம் 2-ம் திகதி முதல் நடைபெறவிருக்கும் காந்தி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மேற்கொள்ளவிருக்கும் இச்சிரமதானத்திட்டத்தின் மூலம் பூநகரி-கோரதீவு பாதையும், நீர்வேலி-கைதடி வீதியும் பூர்த்தி செய்யப்படும். இச்சிரமதான வேலையைப் பூர்த்திசெய்வதற்கு கல்லூரி உயர்வகுப்பு மாணவர்கள், தொண்டர்கள் ஆகியோரின் உதவி கோரப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(6ம் பக்கம் பார்க்க)

## திருமணம்

சத்தியமூர்த்தி | தர்மவல்லி

நாளை [29-8-68] காலை 6 மணிக்கும் 7 மணிக்கும் இடையில் வரும் மங்கல வேளையில் செல்வன் சத்தியமூர்த்திக்கும் செல்வி தர்மவல்லிக்கும் திருவருட்துணையால் திருமணம் நிகழும். இத்திருமண விழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு நட்பும்-சுற்றமும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

டாக்டர் ச. அ. தருமலிங்கமும் பாரியாரும்
1, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.

க. அரியரத்தினமும் பாரியாரும்
'மதி வாசம்'
8, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

849

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகம்

அன்புணர்வை வளர்க்கிறது. துவேஷம் துவேஷத்தை வளர்க்கிறது. துவேஷத்தை பதில் துவேஷத்தினால் வெல்ல முடியாது. துவேஷத்தை அன்பினாலேதான் வெல்லமுடியும்.

—மகாத்மா காந்தி.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone 389.

[illegible] ஆவணி மாதம் 12-ந் திகதி
(28-8-68)

# சிரமதான மூலம் சீரிய பணி

காந்தி ஜயந்தி நூற்றாண்டு விழாவையொட்டி அகில இலங்கை காந்தி சேவா சங்கக் காரியதரிசி 'புரட்சிகரமான சிரமதானத்திட்டம்' ஒன்றைத் தெரிவித்திருக்கிறார். இத்திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் காந்தி நூற்றாண்டு விழாவையொட்டி நிரந்தரமான நினைவுச் சின்னம் ஒன்று அமைப்பதுடன் நாட்டு மக்களுக்கும் நாட்டுக்கும் பெரிதும் பயனளிக்கக் கூடிய ஒரு சேவை நிறைவேறியதிருப்தியும் ஏற்படும். பூநகரி மன்னார்ப் பாதையில் சுமார் அரை மைல் நீளமுள்ள கேரதீவு-சங்குப்பிட்டி கடலை நிரப்பி வீதி அமைப்பதுதான் காந்தி சேவா சங்கக் காரியதரிசி திரு. இ. க. வேலாயுதபிள்ளை தெரிவித்துள்ள திட்டமாகும். தேசிய சேவைச் சபையின் கூட்டத்தில் இத்திட்டம் பற்றி ஆலோசனை செய்வதற்காக யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு அவர் இத்திட்டம் பற்றித் தெரிவித்துள்ள விளக்கம் பிறிதொரு பக்கத்தில் செய்தியாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது

பூநகரி—மன்னார்ப் பாதையில் கேரதீவு-சங்குப்பிட்டி கடலை மூடி, பண்ணை- புங்குடுதீவுக் கடலை மூடி வீதி அமைத்தது போன்று, வீதி அமைக்கவேண்டுமென்று பல வருடங்களாகத் திட்டமிடப்பட்டுவந்திருக்கிறது. சில மாதங்களுக்கு முன் வடபகுதிக்கு விஜயம் செய்த போக்குவரத்து மராமத்து அமைச்சர் திரு. மொண்டேகு ஜயவிக்கிரம, கேரதீவு-சங்குப்பிட்டி கடலை மூடி வீதி அமைத்து அதில் ஒரு பாலம் அமைப்பதற்கென அத்திவாரக்கல் ஒன்றையும் நாட்டிச் சென்றார். குடியேற்றத் திட்டங்கள் பல உருவாகிவரும் இப்பகுதியில் போக்குவரத்துவசதி செய்யப்படவேண்டிய அவசியத்தையும் பூநகரி- மன்னார் மார்க்கப்போக்குவரத்துச் சேவையைச் சீர்திருத்தி அமைப்பதன் மூலம் மன்னார், யாழ்ப்பாண பிரயாணிகளுக்கு அதிக வசதி பெறப்படும் என்றும் அரசாங்கம் உணர்ந்துள்ளது ஆயினும் பொருளாதார நிலை காரணமாக கேரதீவு-சங்குப்பிட்டிப் பாதை அமைப்பு வேலைகளைத் தொடங்க அரசாங்கத்தினால் முடியாமலுள்ளது. இச்சமயத்தில் சிரமதான மூலம் இப்பெரிய பணியை செய்துமுடிக்க முடியுமென்ற நல்ல திட்டத்தை நம்பிக்கையுடன் காந்தி சேவா சங்கக் காரியதரிசி தெரிவித்திருக்கிறார். இத்தியாவும் நமது நாடும் எத்தனையோ நல்ல காரியங்களைச் சிரமதான மூலம் செய்து வழிகாட்டியிருக்கிறது. இத்தப்பணியையும் சிரமதானமாகச் செய்து முடிப்பதற்கு மக்களின் ஆதரவு கிடைக்குமென்பது நிச்சயம். அரசாங்கம் உதவியும் ஊக்கமும் அளித்தால் போதும் அவை கிடைக்குமென்று நம்புவோம்.

# பகவான் சாயிபாபாவுக்கு கிழக்காபிரிக்காவில் வரவேற்பு

ஹைதராபாத், ஆக. 27 பகவான் சத்திய சாயிபாபா சமீபத்தில் கிழக்காபிரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டு பிரசாந்தி நிலயம் திரும்பியிருக்கிறார்.

பகவானின் கிழக்காபிரிக்க விஜயத்தைப் பற்றி பின்னரும் சுவாமிகள் ஹைதராபாத்தைச் சேர்ந்த திரு. எஸ் அனுமந்தராவ் தெரிவிக்கிறார்.

இந்தியாவிலிருந்து பகவான் கம்பாலா போய்ச் சேர்ந்த பொழுது இலட்சக் கணக்கான ஆபிரிக்கர்கள் விமான நிலயத்தில் மௌனமாக முழங்காலில் இருந்து அவரை வரவேற்றனர். இவர்களில் பலரும் கிறிஸ்தவர்கள் வனமலர்களாலும், புலி சிங்கத் தோல்களாலும் அலங்கரிக்கப்பட்ட வாகனமொன்றில் பகவான் அமர்ந்து தரிசனம் கொடுத்தார். மூன்று மைல் தூரத்திலிருந்த விருந்தினர் மாளிகைக்கு பகவான் புறப்பட்ட பொழுது வழியின் இருமருங்கும் மலர்களாலும் சேலைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பகவானை ஒரு புதிய காரில் நைரோபி இன்ஸ்பெக்டர் ஜெனரலும் அங்குள்ள ஹை கமிஷனரும் அழைத்துச் சென்றனர்.

இந்திய குடியரசுத் தலைவருக்குபோல் பகவானுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

குரு பூர்ணிமா தினம்வரைக்கும் பகவான் பலபொது வைபவங்களில் கலந்து கொண்டார். இவை டெலிவிஷனிலும் காட்டப்பட்டன. கடந்த மாதம் 10-ம் திகதி பகவான் நாடு திரும்புவதாக இருந்தது. அன்றைய தினம் ராணுவ அதிகாரி பகவானிடம் வந்து அன்பு பகவான் அன்று தங்களை விட்டுச் செல்வதானால் தம்மைத்தாமே சுட்டுக்கொல்லப் போவதாகக் கூறினார். அதனால் பகவான் தமது பிரயாணத்தை 14-ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

அந்த நான்கு நாட்களும் பல இடங்களுக்கும் பகவான் விமானத்தில் சென்றார். 10-ம் திகதி பகவான் ஆபிரிக்க மக்களின் அன்பு கண்டு பிரிதி மிகுதியால் லட்சக்கணக்கான மக்கள் மத்தியில் தம் கரத்தை நீட்டினார். தங்கக் கலசமொன்று அவர் கைக்கு வந்தது. அதிலிருந்த அமிர்தத்தை தங்கக் கரண்டியொன்றினால் மக்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார். 14-ம் திகதி பிரயாணத்தை ஆரம்பிக்கும் போது மக்களிடம் உங்களுக்கு என்ன வேண்டும் என்று பகவான் கேட்டார். நீங்கள் தான் வேண்டும் என்று அவர்கள் குரலெழுப்பினார்கள். உடனே பகவான் தமது கையை நீட்டினார். உடனே பகவானின் உருவப்படங்கள் ஆயிரக்கணக்காக தோன்றி மக்களின் கைகளுக்கு அம்புகள் செல்வது போல் போய்ச் சேர்ந்தன. இப்படியான ஒரு நிகழ்ச்சி பிரசாந்தி நிலையத்தில் கூட நடந்ததில்லை.

# 'பாரதியின் இலக்கியபாலம் இன்று அமைக்கப்பட்டுவிட்டது'

## 'தமிழன் கனவு' கவிதை நூல் வெளியீட்டுவிழாவில் பேச்சு

வெள்ளவத்தை, செவ். "நமது மக்கள் இன்னும் கவிதையை ரசிக்க ஆரம்பிக்கவில்லை. இன்றுமட்டுமல்ல, சங்ககாலத்திலும் சோழர், பல்லவர் காலத்திலும் இதே நிலைமைதான். இப்போது தோன்றுகின்ற இளங்கவிஞர்கள் பாரதியைப் போன்று சாதாரண மக்களும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் நல்ல கவிதைகளை எழுதுகிறார்கள். பாரதி அன்று கூறியது போல இன்று ஈழத்திற்கும் இந்தியாவுக்கும் இலக்கியப் பாலம் அமைக்கப்பட்டுவிட்டது. அரசியல்வாதிகளாலோ புரட்சியாளர்களாலோ சாதிக்கமுடியாதவொன்றைத் 'தமிழன் கனவு' என்ற கவிதை நூல் மூலம் காசி ஆனந்தன் சாதித்துள்ளார். இது அவரது கனவு மட்டுமல்ல. ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்கள் அனைவரதும் கனவாகும்."

இவ்வாறு வெள்ளவத்தை சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற மட்டக்களப்புக் கவிஞர் காசி ஆனந்தனின் "தமிழன் கனவு" என்ற கவிதை நூல் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ் நிகழ்ச்சி அதிபரியும் கவிஞருமான திரு. க. செ. நடராசா பேசுகையில் கூறினார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளரும் வட்டுக்கோட்டை எம். பி. யுமான திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

"தமிழுலகம் கவிஞர் காசி ஆனந்தனின் கனவை நனவாகக் காணும். கட்டுண்டோம், பொறுத்திருப்போம்; காலம் மாறும்; காண்போம் எமது நனவுகளை. உணர்வுக் கண்கொண்டு காண்பவர்கள் கவிஞர்கள். கவிதை வெறும் பிரசாரக் கருவி மாத்திரமல்ல கருத்தும் உணர்ச்சியும் ஒன்றித்து வாழக்கூடிய தன்மை கவிதைக்கு வேண்டும்.

இன்று ஈழத்தில் மொழி பெயர்ப்புத்துறையில் இருப்பவர்கள் மிகவும் கவனமாகத் தமிழ்ச் சொற்களோடு சிங்களச்சொற்கள் கலவாமல் பாதுகாக்கவேண்டும். இல்லாவிட்டால் ஈழம், மொரேசியஸ், மலேசியா போன்ற நாடுகளில் உள்ள தமிழர்களது மொழிகள் தனித்தனி பாணியில் அமைந்துவிடும். இந்தப் பேராபத்தைத் தடுப்பதற்காக உலகத் தமிழருக்குப் பொதுவான தமிழ்ச்சொற்கள் உருவாக்கப்படவேண்டும். இலங்கையில் தமிழினம் தான் காணவேண்டிய இலட்சியத்தைமறவாமல் என்றும் செயலாற்றவேண்டும். இங்கே மட்டக்களப்புக் கவிஞரை யாழ்ப்பாணத்தார் பாராட்டமுன்வரவில்லை என்ற பிரதேச வேறுபாட்டுக் குரல் ஒருவரால் எழுப்பப்பட்டது. ஆனால் அது தவறு. காசி ஆனந்தனைப் பாராட்ட வடக்கிலிருந்து நானும் இன்னும் பலரும் வந்திருக்கிறோம். யார் எங்கே பிறந்தாலும் தமிழர் என்ற இனத்தின் கீழ் ஒன்றுபடவேண்டும். இதையே எமது கட்சியும் சொல்கிறது" என்றார்.

ஜனப் எம். கே. அப்துல் காதர், இலங்கை இ. மு. செயலாளர் திரு. இளஞ்செழியன், வித்துவான் எஃப். எக்ஸ். சி. நடராசா, ஈழவேந்தன், பண்டித வித்துவான் திரு. வி. சி. கந்தையா ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

ரகுநாதன் பதிப்பக உரிமையாளர் முதல் நூலைப் பெற்றுக்கொண்டார்.

கவிஞர் காசி ஆனந்தன் தமது நன்றியுரையின் போது, "தமிழர்களுடைய தனித்தன்மையும் பண்பாடும் என்றும்பாதுகாக்கப்படவேண்டும். தமிழரின் பண்பாட்டை எதிர்கால உலகம் காத்திருக்கிறது. நாகரிகத்தாலும், அணுகுண்டாலும் அழியப்போகும் உலகத்தை ஒரு காலத்தில் அன்பும் பண்பும் கொண்ட தமிழினந்தான் காக்கப்போகிறது." என்றார்.

மலிந்த விலையில்

# இலங்கை கார்களை பெறலாம்

வெள்ளவத்தை, செவ். ஜா-எலயிலுள்ள "பிலியட்" கார் செய்யும் தொழிற்சாலைக் கட்டிட வேலைகள் துரித கதியில் பூர்த்தியடைந்து வருகின்றன. இங்குள்ள 'சிவசக்தி மில்ஸ்' அரிசி ஆலைக்கு முன்பாக அமைந்துள்ள இக் கார் உற்பத்தித் தொழிற்சாலை செயற்பட ஆரம்பித்ததும் மிகவும் மலிந்த விலையில் இலங்கைக் கார்களைப் பெறமுடியும் என்றும் சாதாரண சம்பளமுள்ள அரசாங்க ஊழியர்களும், ஆசிரியர்களும் கார்களில் பிரயாணம்செய்யக் கூடிய வாய்ப்பு ஏற்படுமென்றும் நம்பப்படுகிறது.

கைத்தொழில் பிரதேசமாகப் பிரகடனம்செய்யப்பட்டுத் துரிதகதியில் முன்னேறிவரும் ஜா-எல—எக்கலைப் பகுதிகளில் தற்பொழுது காணிகளுக்குப் பெரிதும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. இப் பகுதியில் உள்ள 'குருந்து வத்த' என்னுமிடத்தில் அரசாங்க பலவீடமைப்புத் திட்டங்களை ஏற்படுத்தியுள்ளது. இப் பகுதியில் குழாய் நீர் விநியோக திட்டத்திற்கான அடிக்கல்லை சமீபத்தில் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா நாட்டினார்.

திருக்கோணமலை, செவ். திருக்கோணமலைக் கடற்கரையோரங்களில் அனேக ஜெலிமீன் எனக் கூறப்படும் ஒருவகை வழுவழுப்பான நீர் ஜெந்து ஒதுக்கப்பட்டு இறந்து கிடப்பதால் இவ்வழியே செல்பவர்கள் துர்நாற்றம் பொறுக்கமுடியாது இன்னல்படுகின்றனர்.

# ஐயாறன் எழுதுவது

கிளிநொச்சிக்கு பஸ்ஸில் முதன்முறையாகச் சென்றேன். வந்ததெல்லாம் கொள்ளும் மகாராஜன் கப்பல் என்பதுபோல், எவ்வளவு பேர் வந்தாலும் எல்லாரையும் ஏற்றிக்கொண்டே இருந்தனர். பஸ்ஸில் எவ்வளவு பேருக்கு இடம் என்று எழுதியுள்ளனரோ அதைப்போல் இரட்டிப்பு ஏற்றினர். புளிமூடை அடைத்ததுபோல் இருந்தது. "இடமில்லை ஏறவேண்டாம்"? என்று சொல்லவேண்டும்போலிருந்தது. ஆனால் கண்டக்டர் சொன்னால் கேட்பாரா?

கூடுமான ஆட்களை கண்டக்டர் ஏன் ஏற்றுகிறார்? அவருக்கு இந்த வருமானம் சேராது எல்லாம் இ.போ.ச. வுக்குத்தான். அதிக வருமானம் காட்டினால் கண்டக்டருக்கு அதிக சலுகை ஏதும் கிடைக்கிறதா? மேலிடத்து உத்தரவு இல்லாவிட்டால் அவர் ஓர் ஆளையும் அதிகப்படியாக ஏற்றியிருக்கமாட்டார். பளு தாங்காமல் பஸ் டயர் வெடித்து விபத்து ஏற்படுமோ என்றும் தோன்றியது. நல்ல வேளை ஒருபடியாக கிளிநொச்சி சேர்த்ததும் அவிழ்த்துவிட்டனர்.

இ. போ. ச வுக்கு வருமானம் தேவைதான். அதற்காக பிரயாணிகளை இப்படி இம்சை செய்ய வேண்டுமா? அவசியமாயின் அதிக பஸ் விடட்டும். முடியாவிட்டால் தனிப்பட்டவர்களையும் பஸ் ஓட்ட அனுமதிக்கட்டும். பஸ் பிரயாணம் சுகமாக இருப்பதற்குப் பதில் பெரும் இம்சையாக உள்ளது. இதை எம். பி. மார்களும், மந்திரிகளும் கவனித்து இக்கஷ்டத்தைத் தீர்க்க ஏதும் நடவடிக்கை எடுப்பரினரா? இப்போதுள்ள முறையில் பஸ்ஸை விடுவது இ போ.ச. வுக்கு மட்டுமின்றி இலங்கைக்கே வெட்கமாகும்.

ஃ ஃ ஃ

டிக்கெட்டுக்காக ஐந்து ரூபாய் நோட்டைக் கொடுத்தேன். டிக்கெட் கொடுத்தார். பாக்கி சில்லறை தரவில்லை. மிச்சத்தை வழியில் தருவாரென்று இருந்தேன். கிளிநொச்சி வரும் வரை வேறு எதையும் நினைக்காமல் பாக்கிச் சில்லறையைப் பற்றியே எண்ணிக்கொண்டிருந்தேன். முன்னர் ஒரு சமயம் மறந்துவிட்டதாக கற்றுக்கொண்ட பாடம் இது.

இறங்கும்போது கண்டக்டரிடம் சென்றேன். அவர் இரு புருவங்களையும் உயர்த்தி, "ஏன்? என்? என்ன சமாச்சாரம்" என்று கேட்பதுபோல் முகத்தை வைத்துக்கொண்டு பார்த்தார். பாக்கி சில்லறை என்றதும் சுணக்கமாக உடன் கொடுத்துவிட்டார். மற்றவர்களும் இப்படியே வந்து வாங்கிக்கொண்டனர். மறந்துயாரும் போனால் போனதுதான்.

தமிழகத்திலே பஸ்ஸாக்களில் டிக்கெட் கொடுக்கும்போது, பாக்கி சில்லறையை உடன் கொடுக்கமுடியாதிருப்பின் டிக்கெட்டுக்குப் பின்னாலேயே அதை குறித்து விடுகிறார்கள். இடையிலே டிக்கெட்டைக் காட்டிச் சொல்லி, சில்லறை பாக்கியைக் கொடுக்கின்றனர். அப்படி இங்கும் செய்ய முடியாதா என்று கேட்டதற்கு, "எங்களுக்கு எல்லாம் ஞாபகமிருக்கும்; ஏன் எழுதுவான்?" என்று பதில் கொடுத்தார் கண்டக்டர்.

பஸ்கண்டக்டர்வேலைகஷ்டமல்ல. பலபல ஜோலிகள்.

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலம் தொடர்ச்சி)

வணப் பொறுப்புள்ளது. இவ்வளவு வேலைகளுக்கிடையில் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு பாக்கி என்பதை சரியாக நினைத்திருக்க முடியுமா? தவறு ஏற்பட்டால் கைநஷ்டமும் ஏற்படுந்தானே. ஆகவே, டிக்கெட்டின் பின்புறத்திலேயே பாக்கியைக் குறிப்பிடச் செய்துவிட்டால், அது நல்லதுதானே இ. போ. ச. மேலதிகாரிகள் இவ்விஷயத்தையும் கவனித்து, தக்க ஏற்பாடு செய்வார்களா?

எம். பி. மார்களும், பஸ் மேலதிகாரிகளும், மந்திரிகளும் அடிக்கடி பஸ்ஸில் பிரயாணம் செய்வார்களாயின் அவர்கள் பிரயாணிகளின் கஷ்டங்களை உணரவும் பஸ் பிரயாண சங்கடங்களைக் குறைக்கவும் முற்படக் கூடும்.

ஃ ஃ ஃ

மத்தளும் வாழுமாங்கேள் பாவியேன் பாவி வந்து
சித்தத்துள் ஐவர் தீய
செய்வினை பலவுஞ் செய்ய
மத்துறு தயிரேபோல
மறுகுமென்னுள்ளந் தானும்
அத்தனே அமரர் கோவே
ஆரூர் மூலட்டவீரே

— அப்பர்சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செக்-சோவியத் தலைவர்களின்

# மாஸ்கோ பேச்சுக்கள் பற்றி முரண்பாடான செய்திகள்

## இறுதி உடன்பாடு இன்னும் இல்லையாம்

## விவாதம் தொடர்வதாக 'பிராக்' வானொலி தகவல்

லண்டன், ஆகஸ்ட் 27

**செக்கோஸ்லாவாக்கிய தலைவர்களுக்கும் சோவியத் யூனியன் தலைவர்களுக்குமிடையில் மாஸ்கோவில் நடைபெறும் பேச்சுகள் பற்றி முரண்பட்ட தகவல்களே கிடைத்துக்கொண்டிருக்கின்றன.**

முதலில் கிடைத்த செய்திகள் இருதரப்பினருக்குமிடையில் அடிப்படை விஷயங்களில் உடன்பாடு ஏற்பட்டுவிட்டதாகக் கூறின. ஆனால் பின்னர் கிடைத்த செய்திகள், பேச்சுகள் தொடர்ந்து நடைபெறுவதாகவும் முக்கிய விஷயங்கள் பற்றி இப்பொழுது விவாதம் நடைபெறுவதாகவும் கூறுகின்றன.

செக்கோஸ்லவாக்கிய தலைவர்களுக்கும் சோவியத் யூனியன் தலைவர்களுக்குமிடையில் மாஸ்கோவில் நடைபெற்ற பேச்சுகளில் சமரச உடன்பாடு ஏற்பட்டுவிட்டதாக முதல் செய்திகள் வந்தபோதிலும் இறுதியான ஒப்பந்தம் ஒன்றும் ஏற்படவில்லையென்றும் பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறுவதாகவும் செக்கோஸ்லவாக்கிய தலைநகரிலிருந்து ஒலிபரப்பப்பட்ட சுதந்திர வானொலி செய்தி ஒன்று வலியுறுத்திக் கூறியது.

பேச்சுகள் தொடர்ந்து நடைபெறுவதாக செக்கோஸ்லவாக்கியாவின் பிரதம மந்திரி திரு. செர்னிக் நேற்று மாஸ்கோவிலிருந்து செக்கோஸ்லவாக்கியாவிலுள்ள தமது உதவி பிரதமருக்கு டெலிபோனில் பேசுகையில் கூறியிருப்பதாக பிராக் சுதந்திர வானொலி கூறியது.

மாஸ்கோ பேச்சுகளில் உடன்பாடு ஏற்பட்டுவிட்டதாகவும் செக். நாட்டிலுள்ள வார்ஸோ ராணுவ ஒப்பந்த நாடுகளின் துருப்புகள் படிப்படியாக விலக்கப்படுமென்றும், செக்கோஸ்லவாக்கிய தலைவர்கள் தொடர்ந்து தமது பதவிகளில் இருப்பார்களென்றும், அவர்களின் தாராளக் கொள்கை நடைமுறையில் இருக்க அனுமதிக்கப்படுவர் என்றும் ஆனால் இதற்குப் பதிலாக நாட்டிலுள்ள பத்திரிகைகள் மீது அதிக கட்டுப்பாடு விதிக்கப்படும் என்றும் முன்னர் கிடைத்த மாஸ்கோ செய்திகள் கூறின.

## ரஷ்ய தரப்பில் தகவல் இல்லை

மாஸ்கோவில் நடைபெற்றுவரும் பேச்சுகள் பற்றி ரஷ்யத் தரப்பில் எதுவித அறிகுறியும் இல்லை. பேச்சுகள் எந்த அளவில் முன்றேறியுள்ளனவென்றோ எந்த எந்த விஷயங்களில் உடன்பாடு ஏற்பட்டுள்ளனவென்றோ சோவியத் தரப்பில் எதுவும் அறிவிக்கப்படவில்லை. அதே சமயம் மாஸ்கோ பேச்சுகள் சமத்துவ அடிப்படையில் நடக்கவில்லையென்று பிராக் சுதந்திர வானொலி குற்றஞ்சாட்டியுள்ளது.

## 'பிராக்' நகர் துண்டிப்பு

செக்கோஸ்லவாக்கியாவில் புகுந்துள்ள சோவியத் துருப்புகள் பிராக் நகரை நாட்டின் இதர பகுதிகளிலிருந்து முற்றாகத் துண்டித்துவிட்டதாக பிராக் சுதந்திர வானொலி தெரிவித்தது. மேற்கு ஜெர்மனியுடனான எல்லைப் பகுதியில் ரஷ்யத் துருப்புகளின் காவல் பலப்படுத்தப்பட்டுள்ளது. நகரின் எல்லைகளில் தடைகள் போட்டுத் தடுத்துள்ளனர். உத்தரவுகளை மீறும் பொது மக்கள் சுடப்படலாம் என்றும் அஞ்சப்படுகிறதாம்.

## நான்கு அமைச்சர்கள் சுடப்பட்டனர்

ரகசியக் கூட்டமொன்றில் கலந்துகொண்டுவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த நான்கு செக் மந்திரிசபை அமைச்சர்கள் மீது ஆக்கிரமிப்புப் படைகள் சுட்டதாக பிராக் வானொலி தெரிவித்தது.

### 30 பேர் மரணம்

இதுவரை நடைபெற்றுள்ள துப்பாக்கிப் பிரயோகங்களில் குறைந்தது 30பேர் மரணமாகியிருக்கலாம் என்றும் 300க்கு மேலானவர்கள் காயமடைந்திருப்பர் என்றும் கருதப்படுகின்றது.

### பந்தோபஸ்து சபை

மாஸ்கோவில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளின் முடிவுகள் தெரியும்வரைக் காத்திருக்கும் பொருட்டு ஐ. நா. பந்தோபஸ்துசபை தனது கூட்டத்தை ஒத்திப் போட்டிருக்கின்றது. அதே சமயம் ஐ. நா.விலுள்ள செக்கோஸ்லவாக்கிய தூது கோஷ்டியினர் எதுவித விவாதங்களிலும் கலந்துகொள்வதில்லையென முடிவுசெய்துள்ளனர். அப்படி கலந்துகொள்வதனால் மாஸ்கோ பேச்சுகளில் சிக்கல் விளையலாம் என்று அவர்கள் அஞ்சுகின்றனர்,

### கி. ஜெர்மனியில்

நோர்வே நாட்டில் ராணுவத்தினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 'லீவு' யாவும் ரத்துசெய்யப்பட்டுள்ளது.

கிழக்கு ஜெர்மனியில் மக்கள் படை திரட்டப்படுவதாக பெர்லின் செய்திகள் கூறுகின்றன.

புதுடில்லி

### நூதனசாலையில் பெறுமதியான ஆபரணங்கள் களவு

புதுடில்லி, ஆக. 27

புதுடில்லியிலுள்ள தேசிய நூதனசாலையில் பல ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஆபரணங்களும், பழைய நாணயங்களும் காணாமல் போய்விட்டதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

## சீனாவின் ஆட்சேபம்

பிராக்கிலுள்ள நவசீன தூதரகத்திற்குள் ரஷ்யத் துருப்புகள் புகுந்ததாக சீன அரசாங்கம் சோவியத் யூனியனிடம் கடும் ஆட்சேபம் ஒன்றை தெரிவித்துள்ளது.

சீனத் தூதரகத்திற்குள் நுழைந்தது மட்டுமின்றி தூதரகத்திற்கு மேலே சுட்டதாகவும் சீனா குற்றஞ்சாட்டியுள்ளது.

### இந்திய பிரஜைகள்

செக்கோஸ்லாவேக்கியாவிலுள்ள இந்திய பிரஜைகள் அனைவரும் பத்திரமாக இருப்பதாக பிராக்கிலுள்ள இந்திய தூதரகம் அறிவித்துள்ளது.

அமெரிக்கமக்களுககு

## வடவியட்னும் பிரதிநிதியின் நேரடி கோரிக்கை

பாரிஸ், ஆக. 27

வியட்னும் யுத்தத்திற்கு முற்றுப்புள்ளிவைக்க அமெரிக்க அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்தும்படி பிராரிஸ் தலைநகரில் நடைபெறும் அமெரிக்க—வடவியட்னும் பேச்சுகளில் கலந்துகொள்ளும் வடவியட்னும் பிரதம பிரதிநிதி திரு. தான்பே அமெரிக்க மக்களை நேரடியாகக் கேட்டுக்கொண்டுள்ளார். வியட்னும் விவகாரத்தில் அதிபர் ஜோன்ஸன் கடைப்பிடிக்கும் கொள்கையை அவர் கண்டித்துள்ளார். அதே சமயம் அமெரிக்க எதிர்க் கட்சிகளின் நிலையை அவர் பாராட்டியுள்ளார்.

## பிரான்ஸ்ஜலஜகுண்டு: யுதாண்ட் கண்டனம்

நியுயோர்க், ஆக். 27

பிரான்ஸ் அண்மையில் நடத்திய ஜலவாயுக்குண்டு சோதனை குறித்து ஐ. நா. பொதுக்காரியதரிசி கண்டனம் தெரிவித்துள்ளார்.

அணுகுண்டு சோதனை எங்கு நடந்தாலும், எப்படி நடந்தாலும் அது கண்டிக்கப்படவேண்டியதே என்று யுதாண்ட் குறிப்பிட்டுள்ளார்.

1963-ல் அணுக்குண்டு பரீட்சைகளைத் தடைசெய்வதற்காக ஐ. நா. நிறைவேற்றிய தீர்மானத்தையும் யுதாண்ட் நினைவுறுத்தியிருக்கின்றார். இந்த ஒப்பந்தத்தில் பிரான்ஸ் கைச்சாத்திடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆந்திராவில்

### 17 ஆயிரம் கிராமங்களில் கடும்வரட்சி

புதுடில்லி, ஆக. 27

ஆந்திரமாநிலத்தில் 17 ஆயிரம் கிராமங்கள் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன, ஒரு கோடியே 27 லட்சம்மக்கள் இதனால் கஷ்டத்துக்குள்ளாகியிருக்கிறார்கள். வரட்சியால் நெற்சாகுபடி தடைபட்டுள்ளது. இதனால் மற்ற மாநிலங்களுக்கு அரிசி அனுப்புவதை நிறுத்திவைக்க இந்திய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

### புதுச்சேரியில் காங்கிரஸ்நிலை பலவீனம்

சென்னை, ஆக. 27

புதுச்சேரி மாநில சட்டசபையில் ஆளும் கட்சியான காங்கிரஸிலிருந்து நான்கு பேர் ராஜினுமா செய்திருப்பதாக முதன்மந்திரி திரு. வெங்கட சுப்பரெட்டியார் அறிவித்துள்ளார். 30 பேர் கொண்ட சட்டசபையில் காங்கிரஸ் கட்சிக்கு இப்பொழுது 15 பேர் இருக்கிருர்கள். சட்டசபையின் சபாநாயகரான திரு, மாணிக்கவாசக ரெட்டியாரும் ஏற்கனவே ராஜினுமாச் செய்திருக்கிருர்.

### இயற்கை ரப்பர் மகாநாடு இலங்கையும் கலந்துகொள்ளும்

கோலாலம்பூர், ஆக. 26

கோலாலம்பூரில் நடைபெறவிருக்கும் இயற்கை ரப்பர் மகாநாட்டில் இலங்கையும் கலந்து கொள்ளும். இலங்கையைச் சேர்ந்த நிபுணர்கள் இம்மகாநாட்டில் கலந்துகொள்வதால், இலங்கை ரப்பர் துறையில் நல்ல எதிர்காலத்தை அடையலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை உட்பட பல் வேறு நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான நிபுணர்கள் இந்த இயற்கை ரப்பர் மகாநாட்டில் கலந்துகொள்வர்.

### பரஸ்பர குற்றச்சாட்டு

கெய்ரோ, ஆக. 27

ஜோர்டானும், இஸ்ரேலும் ஒன்றையொன்று தாக்கியதாக ஐ. நா. சபைக்குப் புகார் செய்துள்ளன. ஆனால் விவாதம் நடத்தும்படி எந்த நாடும் கோரவில்லை.

இரு நாடுகளுக்குமிடையே நேற்றுக் கடும் எல்லைப்போர் நடந்ததாக முதல் வந்த செய்திகள் கூறின.

### உற்சவம்

கோண்டாவில், செவ்:

கோண்டாவில் சந்தர் வளவுப்பிள்ளையார்கோவில் வருடாந்த உற்சவம் நாளை ஆரம்பமாகும். அடுத்த மாதம் 5-ந்திகதி தேர்த்திருவிழாவும் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தராதரபத்திர ஆசிரியர் நிலை: பொதுக் கூட்டத்தில் கவலை

யாழ்ப்பாணம், புதன்

"1946ம் ஆண்டு தொடக்கம் 1957ம் ஆண்டுவரை நடைபெற்ற 3 விசாரணைக் கமிஷன் முன்னிலையிலும் எமது நிலைபற்றி எவருமே எடுத்துக் கூறவில்லை. இதனால் எமது வேதனம், வேதன உயர்ச்சி ஆகியன பயிற்றப்பட்ட ஆசிரியர்களிலும் பார்க்க அரைவாசியாகக் குறைந்துவிட்டது. இதிலிருந்து விடுதலை பெற ஒரு சங்கத்தின் ஆதிக்கத்தில் நாம் அனைவரும் ஒன்றுபடவேண்டும்."

இவ்வாறு ஆசிரியர் திரு. அ. செல்வத்துரை தெரிவித்தார்.

நல்லூர் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்ற அகில இலங்கை ஆசிரிய தராதரப் பத்திர ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டத்தில் திரு. அ. செல்வத்துரை மேலும் பேசுகையில் ஆசிரியர்களின் எதிர்கால நலன் கருதி தீர்மானிக்கப்பட்ட கோரிக்கைகளைப் பிரதம மந்திரி, கல்வியமைச்சர், உப-சபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம், தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் ஆகியோரைப் பேட்டி கண்டு எடுத்துக்கூறவேண்டுமெனத் தெரிவித்தார்.

திரு. சி. சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பின்தங்கிய இடங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களின் பிள்ளைகள், அவர்கள் விரும்பும் பாடசாலையில் கல்வி கற்க உரிமையளிக்கவேண்டுமெனக் கோரும் தீர்மானம் உட்பட 7 தீர்மானங்கள் இங்கு நிறைவேற்றப்பட்டன. [ஈ. நி]

சுழிபுரம்

## மீனவருக்கு அடையாள அட்டை

சுழிபுரம், செவ்.

சுழிபுரம் பகுதியில் கடல் தொழில் செய்யும் மீனவர்களுக்கு அரசாங்கத்தினால் அடையாள அட்டைகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. இதுவரை கடலையிலுள்ள மீனவர்களுக்கு வழங்கப்பட்ட அட்டைகளில் ஒப்படை இருக்கின்றது. கழுத்தில் தொங்கவிட வசதியாகவும் உண்டு. ஆனால் சுழிபுரம் மீனவர்களுக்கு வழங்கப்பட்ட அட்டைகளில் ஓட்டைகள் வைக்கப்படவில்லை. இதனால் சுழிபுரம் மீனவர்கள் தமது அட்டைகளை எவ்வாறு வைத்திருப்பது என தெரியாமலிருக்கின்றார்கள்.

## நிர்வாகிகள்

உடுப்பிட்டி, செவ்.

அகில இலங்கை மோட்டார் ஊழியர் சங்கத்தின் பருத்தித்துறை இ. போ. ச. டிப்போக்களின் நிர்வாகிகள் விபரம் வருமாறு:

தலைவர்- திரு. வி. சரவணமுத்து, உப-தலைவர்- திரு. என். கே. நித்தியநாதன், செயலாளர்- திரு. கே. தம்பிப்பிள்ளை, உபசெயலாளர்- திரு. கே. பொன்னம்பலம், தனாதிகாரி- திரு. பி. வேலுப்பிள்ளை, நிர்வாகக்குழு- திருவாளர்கள் கே. சிவகுரு, எம். அமிர்தலிங்கம், எஸ். பொன்னம்பலம், வி. சாம்கோசர்.

டிப்போக்கவுன்சில்- திருவாளர்கள் வி. சரவணமுத்து, கே. தம்பிப்பிள்ளை. மேலதிக உறுப்பினர் எஸ். பொன்னம்பலம், மாவட்டக் கவுன்சில்- திரு. வி. சாம்கோசர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் 28—8—68

[செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீற்றர் அல் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இன்னிசைமிகளிதங்கள்.

344 மீற்றர் அல் 49 மீற்றர்

பகல் 12-00 திரைப்படவசனம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீற்றர் அல் 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 குதூகலம், 6-45 பாவலம், 7-00 இராமசஞ்சிகை, 7-30 பேச்சு, 7-45 வாத்திய இசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைச் சித்திரம், 10-00 நேயர் விருப்பம்.

## அடையாள அட்டை இல்லாத மீனவர்

### என்ன செய்வது?

காங்கேசன்துறை, செவ்.

வடபகுதியில் 5,000 மீனவர் மட்டும் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்துள்ளார்கள். மிகுதியான மீனவர்கள் அடையாள அட்டை இல்லாமல் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்ல முடியுமா, முடியாதா என்ற சந்தேகம் மீனவர் மத்தியில் எழுந்துள்ளது. இந்த 5,000 மீனவரும் சாதாரண ஆட்களும் விண்ணப்பித்துள்ளனர். மீனவர்கள் அநேகர் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கவில்லை. இனிமேல் எப்படி அடையாள அட்டை பெறுவது என்பது பற்றிய விபரம் அனேகருக்கு தெரியாமலிருப்பதே இதற்குக் காரணம் என்று தெரியவருகிறது.

## செல்வச்சந்நிதி ஆலய உற்சவம்

கல்வெட்டித்துறை, செவ்

தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவிலின் தென்புறமாக அமைந்திருக்கும் "ஆனந்தாச்சிரமம்" என்ற இடத்திலிருந்து நேற்று முன்தினம் சுவாமிநாத தம்பிரான் தலைமையில் சம்பந்தர் சுவாமிகளின்படம் ஏந்திய வண்ணம் பஜனைக் கோஷ்டியொன்று செல்வச்சந்நிதி ஆலயத்தை வந்து சேர்ந்தது. பஜனைக் கோஷ்டிப் பக்தர்களுக்கு ஆனந்தாச்சிரமத்தில் திரு. மயில்வாகனம்சுவாமியால் தேநீர் உபசாரமும் அளிக்கப்பட்டது.

## புதிய நிர்வாகிகள்

உடுவில், செவ்.

கோண்டாவில் தெற்கு டிருப்பாய் சனசமூகநிலைய வருடாந்தக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. நடப்புவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. பா. பரமநாதன், உபதலைவர் திரு. எஸ். பி. ஆனந்தன், காரியதரிசி: திரு. கே. அரசரத்தினம், உபகாரியதரிசி: திரு. ஈ. அம்பலவாணர், தனாதிகாரி: திரு. ஒ. ஆர். சந்திரன், உபதனாதிகாரி: திரு. எஸ். குகதாசன்.

## இன்றைய பலன்

(28 - 8 - 68)

ஆவணி மீ 12 உ

புதன்கிழமை

திதி- பஞ்சமி இரவு 11-31 மேல் ஷஷ்டி.

நட்சத்திரம்- சித்திரை பகல் 2-52 மேல் சுவாதி.

ராகுகாலம் - 12-04 1-34.

சுபநேரம் - 4-34— 6-04.

இன்று பிறந்தவர்களுக்கு— சென்ற இடம் சிறப்பும், செய்தொழில் விருத்தியும், பட்டர் வாழ்வில் பக்தி பரவசம் வித்தை பயிலுவோர் சித்தியடைவர். மணம் முடிப்போர் மகிழ்ச்சி பெறுவர். கைத்தொழில் புரிவோர்க்கு கணிசமான வெற்றிக்குரிய ஆண்டாகும்.

மேஷம்- காதல் கரும்பு சுவைத்திட விருப்பு.

ரிஷபம்- துன்பத்தின் நிழல் தொடர்ந்துவரும் இன்று.

மிதுனம்- தெய்வத்தின் அருள் தேடியது கிடைக்கும்.

கடகம்- உத்தியோக விருத்தி பணச் சிந்தை.

சிம்மம்- புண்ணிய விருப்பு சோகச் சிந்தை.

கன்னி- விகாத நட்டம் வீண்பெயர் கேட்டல்.

துலாம்- எதிர்பாராத வரவு, எண்ணியது கைகூடும்.

விருச்சிகம். வாக்குச் சித்தி, வணிக விருத்தி.

தனுசு- வீண்முயற்சி வேதனை மிகுதி.

மகரம்- வாகனசுகப் வரவிலும் திருப்தி.

கும்பம்- கல்விச் சிறப்பு கடமையில் வெற்றி.

மீனம்- அன்னியவாசம் அலைமோசனம்.

சோதிடக்கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை

## அலங்கார உற்சவம்

புன்னாலைக்கட்டுவன், செவ்.

ஊரெழு கிழக்கைப்பதி ஸ்ரீ பருவதவர்த்தினி அம்மன்கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று ஆரம்பமானது. தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும் உற்சவத்தின் இறுதி நாள் விசேட சங்காபிஷேகமும் அன்னாபிஷேகமும் நடைபெறும்.

ஃ ஃ ஃ

புன்னாலைக்கட்டுவன், புதன்

நீர்வேலி — அரசகேசரிப் பிள்ளையார் வருடாந்த மகா உற்சவம் இன்றைய கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும் திருவிழாக்களில் ஒன்பதாம் நாள் ரதஉற்சவமும் பத்தாம் நாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும். பதினோராம்நாள் இரவு பூங்காவனத்திருவிழா இடம்பெறும்.

## திருடர்கள் தப்பினர்

புன்னாலைக்கட்டுவன், செவ்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு சந்திக்கருகாமையிலுள்ள வீடொன்றில் திருடர்கள் புகுந்த இருட [illegible]

## நிரந்தரசேவை தீர்மானம் ஏன் அமுல் நடத்தப்படவில்லை?

### உள்ளூராட்சி மன்ற ஊழியர் பற்றி மாத்தறை எம். பி. கேட்பார்


கொழும்பு, செவ்.

உள்ளூராட்சி மன்றங்களில் ஓராண்டு காலம் சேவையாற்றிய சகல தொழிலாளர்களும் நிரந்தர சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அத்தீர்மானம் இதை இதுவரை அமுல் நடத்த ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கேள்வியை ஆட்சிமன்றத்தில் கேட்பதற்கு கம்யூனிஸ்ட் (மாஸ்கோ) கட்சியைச் சேர்ந்த மாத்தறை எம். பி. திரு. பி. வை. துடாவ ஆட்சிமன்றத்தில் கேட்பார்.

அடுத்தமாதம் 20ம் திகதி உள்ளூராட்சி அமைச்சரிடமும், ஒலிபரப்பு அமைச்சரிடமும் பாராளுமன்றக் காரியதரிசியைக் கேட்பதற்கு மாத்தறை எம். பி. மேற்கண்ட கேள்வியை முன்னறிவித்தல் கொடுத்துள்ளதார்.

கிராமசபை, பட்டின சபை, நகரசபை, மாநகர சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களில் ஓராண்டு காலம் தொடர்ந்து சேவையாற்றி சகல தொழிலாளர்களும் நிரந்தர சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற தீர்மானம் கடந்தவருடம் டிசம்பர் மாதம் 4-ம் திகதி மாத்தறை எம். பி. யால் சமர்ப்பிக்கப்பட்டு ஆட்சிமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது என்பதும் முன்னறிவித்தலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## வெளிநாடுகள் சென்று திரும்பினர்



யாழ்ப்பாணம், புதன்

பல்கேரியாவில் நடைபெற்ற உலக ஜனநாயக வாலிபர்களின் 9-வது விழாவில் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்து உரையாற்றிய திரு. வேலுப்பிள்ளை பாலசிங்கம் ஒன்றரைமாத சோவியத்நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தின்பின்னர் இம்மாதம் 19-ந் திகதி இலங்கை திரும்பினார்.

துன்னாலையைச் சேர்ந்த திரு. பாலசிங்கம் அகில இலங்கை ஐக்கிய மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் யாழ். கிளை பிரதிநிதியாகவும், இலங்கை சமசமாஜ வாலிபர் சங்க சம்மேளன மத்திய கமிட்டி உறுப்பினராகவும் கடமையாற்றுகின்றார். சோவியத் யூனியன் வாலிபர் சங்க அழைப்பின் பேரில் அங்கு சென்ற இவர் ருமேனியா, பல்கேரியா ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்தார்.

## இங்கிலாந்து சென்றார்

உடுவில், செவ்.

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திரு. சி. மாணிக்கவாசகர் பொறியியல் துறையில் மேற்படிப்புக்கென்று இங்கிலாந்து பயணமானார். இவர் கொக்குவில் கிழக்கு இ. சின்னத்தம்பியின் சிரேஷ்ட புதல்வரும், கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவருமாவார்.

## மருந்துகள் வந்து சேர்ந்தன

சுழிபுரம், செவ்வாய்

தொல்புரம் பாணாவெட்டி அரசினர் வைத்தியசாலைக்கு வேண்டிய மருந்துகள் வந்து சேர்ந்துள்ளன. கடந்த பல மாதங்களாக மருந்துகள் பற்றாக்குறையால் நோயாளர்கள் மிகவும் அவதியுற்றனர். பலருடைய கோரிக்கையைப்படுத்து மருந்துகள் வந்துசேர்ந்தன.

சுழிபுரம், செவ்வாய்

தொல்புரம் மடத்துப் பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றது.


உறுதியானதும்
நீடித்து உழைப்பதும்
தன்னிகரற்றதுமான

"வைத்திலிங்கம்ஸ்"

இரும்பு - பித்தளை மர ஸ்குறு ஆணிகளை

நீங்கள் வாங்குவதனால்
ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும்வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்.

தயாரிப்பாளர்கள்:-

என். வைத்திலிங்கம்நிறுவனத்தார்

இரும்பு வியாபாரிகள்
450, பழைய சோனகதெரு, கொழும்பு-12.
தொலைபேசி: 7143 — 2029

கிளை: 138, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

எமது ஸ்தாபனத்தின் பொருட்களை விற்பனை செய்வதற்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. நேரில் வரவும். குட்வின் அட்வடைசிங் அன் சேல்ஸ் ஏஜென்ஸி, மைலன்ஸ், கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 49

காசாளர்:

பிணைப்பணம் செலுத்தக் கூடிய பெண்கள் மட்டும் நேரில் வரவும். குட்வின் அட்வடைசிங் அன் சேல்ஸ் ஏஜென்ஸ், மைலன்ஸ், 119/11 கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 50

பொறுப்பாளர்:

இணுவில் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் பீடித் தொழிற்பகுதிக்குப்பொறுப்பாளர் ஒருவர் தேவை. மனுச்செய்வோர் பீடித் தொழிலில் பூரண அனுபவம் வாய்ந்தவராயும், ரூபா 500/- ரொக்கப்பிணை செலுத்தக்கூடியவராயும் இருத்தல்வேண்டும். தாம் எதிர்பார்க்கும் சம்பளத்தைக் குறித்து தொழில்பற்றிய சான்றிதழ்களுடன் 5-9-68க்கு முன்னர் பதிவுதபால் மூலம் மனுச்செய்யவும். காரியதரிசி, இணுவில் ப. நோ. கூ. சங்கம். 51

## உதைபந்தாட்டப் போட்டி

உடுவில், செவ்.

வலிகாமம் வடக்கு உடுவில் தொகுதி விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் வருடம்தோறும் நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் வரும் செப்டம்பர் மாதம் 10 திகதி ஆரம்பமாகின்றன.

இவ்விளையாட்டுப்போட்டிகளில் பங்கு பற்ற விரும்பும் சனசமூக நிலையங்கள் விளையாட்டுக் கழகங்கள், கிராம முன்னேற்ற சங்கங்கள் தமது விண்ணப்பத்தை செப்டம்பர் மாதம் 5-ம்

5-வது டெஸ்ட் கிரிக்கெட்

## இங்கிலாந்து 2-வது இன்னிங்ஸ் 181 ஓட்டங்கள்

லண்டன், ஆக. 26

இங்கிலாந்துக் கிரிக்கெட் கோஷ்டிக்கும், அவுஸ்திரேலியாக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் லண்டனில் நடைபெறும் 5-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின், நாலாம் நாளான இன்று இங்கிலாந்துக் கோஷ்டி தனது இரண்டாவது இன்னிங்ஸில் மொத்தம் 181 ஓட்டங்கள் மாத்திரம் பெற்றது. அவுஸ்திரேலியாக் கோஷ்டி தனது முதல் இன்னிங்ஸில் மொத்தம் 324 ஓட்டங்களைப் பெற்றது. இன்றைய ஆட்டம் முடிவடையும் போது அவுஸ்திரேலியாக் கோஷ்டி தனது இரண்டாவது இன்னிங்ஸில், இரண்டு விக்கெட்டுகளை இழந்து 13 ஓட்டங்களைப் பெற்றது. லோறேயும், றெட்பாத்தும் ஆட்டமிழந்தனர். அவுஸ்திரேலியாக் கோஷ்டி வெற்றி பெற, இவ் டெஸ்டின் கடைசி நாளான இன்று 323 ஓட்டங்களைப் பெற வேண்டும். இங்கிலாந்துக் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 494 ஓட்டங்களைப் பெற்றது.

—— [தே. நி]

## விளையாட்டுப் போட்டி

காங்கேசன்துறை, செவ்.

வலி-வடக்கு காங்கேசன்துறைப் பகுதி விளையாட்டுப் போட்டிகளின் இறுதி நாள் விளையாட்டுப்போட்டி மாதம் இம்மாதம் 30-ந் திகதி நடைபெறவிருக்கிறது. பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகரா கலந்துகொள்வார்.

திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டுமென இவ் விளையாட்டுப் போட்டிச் செயலாளர் திரு. ஏ. முருகையா அறிவித்துள்ளார்.

## 'சன்ரைஸ்' வென்றது

புத்தளம், செவ்.

கற்பிட்டி வட்டார கரப்பந்தாட்டக் கழகங்களுக்கிடையேயான இறுதிப் போட்டியில் கொத்தாந்தீவு வெலிசன் கோஷ்டியும் கற்பிட்டி சன்ரைஸ் கழகமும் மோதிக் கொண்டன. சன்ரைஸ் கோஷ்டி 3:2 ஆட்டங்களால் வெற்றியீட்டியது. வடமேல் மாகாண கரபந்தாட்டச்சங்கக் காரியதரிசி மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## பௌர்ணமி தின விழா

யாழ்ப்பாணம், செவ்.

அடுத்த மாதம் 6ந் தேதி மாலை யாழ்ப்பாண மாநகர சபையினரால் நடாத்தப்படும் பௌர்ணமி தின கலைவிழா நிகழ்ச்சிகள் யாழ் திறந்தவெளியரங்கில் நடைபெறும். 'நானும் பெண்தான்' என்ற சமூக நாடகமும், 'தீர்க்கசுமங்கலி' என்ற புராண நாடகமும் இடம்பெறும்.

## 19வது ஆண்டு மாநாடு

காங்கேசன்துறை, செவ்.

இலங்கை மோட்டார் ஊழியர் சங்கத்தின் 19வது வருடாந்த மகாநாடு அடுத்த மாதம் 22, 23ந் தேதிகளில் கொழும்பு தர்மபால மாவத்தையிலுள்ள செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.


வின்ஸர்

தினசரி 3 காட்சிகள்

ரவிச்சந்திரன் ஜெயலலிதா நடித்த

மாடிவீட்டு மாப்பிள்ளை

2-வது வாரம்

ராஜா

(யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-45

AVM. ராஜன் - புஷ்பலதா நடித்த

கற்பூரம்

மானிப்பாய்

வெஸ்லி சினிமா

தினசரி 2-30 6-30 9-30

எஸ்.எஸ்.ஆர்.-தேவிகா நடித்த

மறக்க முடியுமா?

63-வது தினம்!

ராணி

(யாழ்ப்பாணம்)

ஜெமினி — சரோஜாதேவி நடித்த

பணமா பாசமா

3-வது வாரம்

மனோகரா

(யாழ்ப்பாணம்)

தினசரி

6-30, 9-30 மணி

ஜெய்சங்கர் - விஜயலக்ஷ்மி

கே. பி. சுந்தராம்பாள் நடித்த

உயிர்மேல் ஆசை

REGAL JAFFNA

Daily at

4-45, 7-00 & 9-45 p m

Tony Anthony

Luciana Paluzzi

in

Wounds Of Hunger

(Adults)


## பாரதி விழா

வெள்ளவத்தை, செவ்.

கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரித் தமிழ் இலக்கிய மன்றத்தின் ஆதரவில் அடுத்த மாதம் 7-ம் திகதி பாரதிவிழா சிறப்பாக நடைபெறவிருக்கிறது.

0 0 0

இரத்மலானை ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினரின் பாரதிவிழா வழமைபோல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அடுத்தமாதம் 14-ம் திகதி நடைபெறவிருக்கிறது. கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்குப் பதக்கங்கள் பரிசளிக்கப்படுமென்றும் தமிழகத்தில் இருந்தும் இலக்கியகர்த்தாக்களை வரவழைக்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றனவென்றும் விழா அமைப்பாளர் குழுவைச் சேர்ந்த திரு. சி. தில்லைநாதன் தமது நிருபரிடம் தெரிவித்தார்.

0 0 0

கட்டுப்பத்தை தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் தமிழ்இலக்கிய மன்றம் எதிர்வரும் செப்டம்பர் மாத நடுப்பகுதியில் பாரதிவிழாவை வெகுசிறப்பாகக் கொண்டாடவிருக்கிறது.

0 0 0

கொழும்பு சட்டக் கல்லூரித் தமிழ் மாணவர் மன்றமும் செப்டம்பரில் பாரதிவிழாவைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைத் தீவிரமாகச் செய்து வருகின்றது. "பாரதிக்கு விழா வெடுப்பது தமிழ் இளைஞர்கள் ஒவ்வொருவரதும் கடன் என்று மன்றச் செயலாளர் திரு. வ. க. நீலகண்டன் தெரிவித்தார்.

0 0 0

கொழும்பிலுள்ள யாழ். கனிட்ட தொழில்நுட்பக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் திரு. சி. சிவபாதசுந்தரம் தலைமையில் செப்டம்பர் 13-ம் திகதி கொள்ளுப்பிட்டியில் பாரதி விழாவைக் கொண்டாடுவது என்று தீர்மானித்துள்ளது.

## கோழிகளுக்கு ஊசி மருந்து

புன்னாலைக்கட்டுவன், செவ்.

திருநெல்வேலி பிரயோக போஷணைத் திட்டத்தினரால் ஊரெழுப் பகுதியிலுள்ள கோழிகளுக்கு செப்டம்பர் 10-ம் திகதி ஊசி மருந்து போடப்பட இருக்கிறது. நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சியினால் கோழிகள் அதிகமாக இறப்பதைத் தொடர்ந்தே இவ்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.


## விளம்பரம்

### ஏலவிற்பனை

அளவெட்டி ப. நோ. கூ. சங்கத்திற்குரிய பின்வரும் பொருட்கள் 29-8-68 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவ்விடத்தில் ஏலத்தில் விற்கப்படும்.

[1] வெற்றுச்சாக்குகள்

[2] கழிவுத்தடிகள்

காரியதரிசி

அ. ப. நோ. கூ. ச.

அளவெட்டி.

24-8-68. 946


ரொடீஷியாவுக்கு

## பிலிப்பைன்ஸ் பொருளாதாரத் தடை

மணிலா, ஆக. 27

இயான்ஸ்மித்தின் ரொடீஷியாவுடன் தமது நாட்டுக்கிருக்கும் சகல பொருளாதாரத் தொடர்புகளுக்கும் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மார்க்கஸ் தடைவிதித்துள்ளார்.

சட்டவிரோத ரொடீஷிய ஆட்சி குறித்து ஐ. நா. சபை நிறைவேற்றிய தீர்மானத்துக்கிணங்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை

## மக்கள் வங்கி புதிய இடத்துக்கு

காங்கேசன்துறை, செவ்.

காங்கேசன்துறை மக்கள் வங்கி புதிய இடத்துக்கு இடம்மாறுகிறது. காங்கேசன்துறை மக்கள் வங்கிக் கிளை காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக்கு முன்புறத்திலும் தற்பொழுது இருக்கும் இடத்திற்கும் அருகாமையில் அமையவிருக்கிறது.

இதற்கான கட்டடவேலைகள் அண்மைக் காலத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

## விவசாயிகள் கவலை

புத்தளம், செவ்.

உப்பு உற்பத்தியாளர் மகிழ்ச்சியுற்றிருக்கும் இவ்வேளை இப்பகுதி விவசாயிகள் மட்டும் மிக்கவலைக்குள்ளாகியுள்ளனர். மழையில்லாததே அவர்கள் கவலைக்குக்காரணம். ஒருவாரத்தில் மழை இல்லையேல் பயிர் நாசமேற்படுமெனச் சொல்லப்படுகிறது.


லிடோ (கொழும்பு) மைலன் (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

இன்ஸ்லி (கொழும்பு) விஜயா (கண்டி) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை)



ரவிச்சந்திரன்

ஜெயலலிதா

மனோரமா

நாகேஷ்

முத்துராமன்

நடித்த



ஸ்ரீ விநாயகா

பிக்சர்ஸ்

நான்

கெபிட்டல்

(கொழும்பு)

ராஜ்கபூர் — வைஜயந்திமாலா

நடித்த

சங்கம்

ச ங் க ம் மா ர் க்

LIONBRAND SANDANADI THYLAM · சிங்கமார்க் ·

சந்தனாதித் தைலம்

வாங்கி உபயோகியுங்கள், எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:- போன்

ப.மு.&சன்ஸ்.

88, செட்டியார் தெரு, கொழும்பு 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சிலவற்றில் தோல்விகண்ட நாம் வெற்றியும் பெற்றுள்ளோம்'

## அரசியல் நிலைமை பற்றி அமிர்தலிங்கம் விளக்கம்

கோண்டாவில், செவ்.

"நாம் கடந்த காலங்களில் எல்லாம் எதிர்க் கட்சியில் தான் இருந்து வந்தோம். சில நிபந்தனைகளோடு தேசிய அரசாங்கத்தில் சேர்ந்தோம். அதில் சில நிபந்தனைகளைப் பெற்றோம். சிலவற்றில் தோல்வி கண்டோம். தோல்வி கண்டவைகளையும் ஜனக்கிரமத்தில் அவற்றையும் பெறுவதற்கு எம்மாலான முயற்சிகளை எடுப்போம். எம்மில் சிலரிடம் இலஞ்ச ஊழல் இருப்பதாக சிலர் பொய்ப் பிரசாரம் செய்து வருகிறார்கள் நாம் இதைப்பற்றி எம்மில் யாராவது லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு வந்துள்ளதா என சவால் விடுத்தபோது அப்படியொன்றுமில்லை எனப் பதிலிறுத்தார். இதன் பின்னும் மேடைகளில் எமது மிடத்தில் இலஞ்ச ஊழல் இருப்பதாக பிரசாரம் செய்கிறார்கள். அப்படிப் பிரசாரம் செய்பவர்கள் எம்மிடம் இலஞ்சஊழல் இருந்தால் அதை எம்முன் நிரூபிக்கட்டும். இல்லாதவிடத்து கூறியவர்கள் யாராக இருந்தாலும்சரி, அவர்மீது சட்டநடவடிக்கை எடுக்கத் தயங்கோம்."

இவ்வாறு கோண்டாவிலில் நடைபெற்ற இலங்கை தமிழரசுக்கட்சியின் ஆலோசனைக்கூட்டத்தில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம் பேசும்போது குறிப்பிட்டார். திரு. சு. யோகராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது:—

தேர்தல் நெருங்க நெருங்க திரு. ஜி. ஜி ஒற்றுமை என்னும் பல்லவியைப் பாடுகின்றார். ஆனால் பதின்நான்கு அங்கத்தவர்களைக் கொண்ட நாம் கேட்கும் ஒவ்வொன்றையும் சிறிய தொகைகளைக் கொண்ட அவர்கள் எதிர்த்து வருகின்றனர். சாதி, சமய பேதமின்றி எல்லா இன தமிழ் மக்களும் கற்கக் கூடிய தமிழ்ப்பல்கலைக் கழகம் கேட்டால், அதுவேண்டாம் இந்து பல்கலைக்கழகம் வேண்டுமென்கிறார்கள். மாவட்ட சபை கேட்டால், அது தமிழ்மக்களுக்குக் கூடாது என்று கூறினர். அடையாள அட்டையால் எவருக்கும் பாதகமில்லை. தமிழ் மக்களைப் பாதிக்கக்கூடிய எல்லாவற்றையும் அதில் இருந்து நாம் நீக்கிவிட்டோம். இவ் வட்டைமூலம் கள்ளத் தோணி என்ற பேச்சுக்கே இடமில்லாமல்போகும்."

யாழ். மாநகரசபை தேர்தலுக்கு

## தமிழரசு அபேட்சகர் 30-ல் தெரிவு செய்யப்படுவர்

யாழ்ப்பாணம், புதன்

எதிர்வரும் யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தலுக்கு தமிழரசுக்கட்சி அபேட்சகர்களை தெரிவதற்கான கூட்டமொன்று இம்மாதம் 30-ந் திகதி நடைபெறவிருக்கின்றது.

கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளை, கட்சிப் பொதுச்செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி., முன்னாள் தமிழரசுக்கட்சி மாநகர சபை உறுப்பினர்கள், யாழ்ப்பாணப் பகுதிக் கிளைகளின் செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொள்வர். 23 தொகுதிகளுக்கும் தமிழரசுக்கட்சி அபேட்சகர்களை நிறுத்தலாம் எனத் தெரிகின்றது.

தமிழரசுக்கட்சியின் மாநகரசபைத் தேர்தல் விஞ்ஞாபனம் ஒன்றும் இக்கூட்டத்தில் தயாரிக்கப்படும். [ஈ. நி.]

## சைவப்புலவர் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் நடாத்தப்படவிருக்கும் 1968-ம் ஆண்டுக்கான சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர்களுக்கான பரீட்சைகள் இம்மாதம் 29-ந் திகதி முதல் 3 நாட்களுக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது. [ஈ. நி.]

## மாதமுடிவுக்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றது.

தற்போதைய மின்சார நிலைக்காணியில் புதிய வெளிநோயாளர் சிகிச்சை நிலையம் கட்ட ஆரம்பிக்கும் போது, மின்சார நிலைக் காணியிலுள்ள இந்த ஆயுர்வேத வைத்தியசாலை தற்காலிகமாக வெயில் வீதிக்கு மாற்றி அமைக்கப்படலாமெனத் தெரிகின்றது.

## வடக்கில்......

1-ம் பக்கத் தொடர்ச்சி

இந்தப்பாதைகளைத் திருத்துவதற்கான வேலைகள் தொடங்கி அரைவாசியும் இன்னமும் முடிவடையவில்லை. பூநகரி-கேரதீவுப் பாதையை சங்குப்பிட்டிப் பக்கத்தாலும் மற்றும் இரு கரைகளாலும் கல்லுப் போட்டுப் பாதையை அமைக்கமுடியும். இதற்கு தனிப்பட்டவர்களின் டிராக்டர்களும், லொறிகளும் உபயோகிப்பதுடன், கட்டுமரங்களையும், வள்ளங்களையும் உதவிக்குக் கோரி, பகிரங்க வேலைப் பகுதியினரையும் உதவிவேண்டுவதால் சிரமதானத்தை கூடியகெதியில் முடிக்கலாம். இதற்கான பொருட்களைக் கொண்டு வந்துசேர்த்தால் ஒருமாதத்துக்குள்ளேயே சிரமதானத்தை முடிக்கலாம் எனவும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பாதையை அமைப்பதால் இங்கிருந்து மன்னாருக்குச் செல்வதற்கான தூரம் குறையும் எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மகஜரின் பிரதிகள் தேசிய சேவைச் சபை, கொழும்பு நிலஅபிவிருத்திப் பகுதித் தலைவருக்கும், சாவகச்சேரி, பூநகரி, கோப்பாய் கிளிநொச்சிப் பகுதிக் காரியாதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## செக் தலைவர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கலப்புடன் உரைநிகழ்த்துகையில் தமக்கு ஏராளமான வேலையிருக்கிறது என்று தெரிவித்துக் கொண்டனர்.

இத்தலைவர்களுடன் செக்கோஸ்லாவாக்கியா சார்பில் கலந்துகொண்டவேறு 5 பிரமுகர்களும் இன்று திரும்பினர்.

### அதிகாரம் ஏற்றனர்

தாயகம் திரும்பியுள்ள செக் நாட்டுத் தலைவர்கள் மீண்டும் தாம் வகித்துவந்த பதவிகளை நிர்வகிக்கத் தொடங்கிவிட்டதாக செக். நாட்டிலிருந்து வெளியாகிய செய்தி தெரிவித்துள்ளது. பிரதமர் செரனிக் ராஜினாமாச் செய்யப்போவதாகத் தெரிவிக்கப்பட்ட வதந்தியொன்றை அவர் மறுத்து தமக்கு அவ்வித உத்தேசமில்லையெனக் கூறினார்.

### பத்திரிகைகள் வெளிவரும்

சில கட்டுப்பாடுகளுடன் செக் பத்திரிகைகள் நாளை வழமைபோல் வெளிவரும் என அறிவிக்கப்பட்டது.

ரஷ்ய ரகசியப்பொலிஸாரின் எண்ணிக்கை இப்போது இங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### படைகள் விலகுகின்றன

ரஷ்யப்படைகளின் ஒரு பகுதியும் மற்றவார்ஸோ ராணுவஒப்பந்த நாடுகளின் துருப்புக்களும் படிப்படியாக இப்போது செக் நாட்டிலிருந்து விலகிக்கொண்டிருக்கின்றன. எனினும் மேற்கு ஜெர்மன் எல்லையில் துருப்புக்கள் அதிகமாக இருந்து கொண்டிருக்கும் எனத்தெரிவிக்கப்பட்டது. வேற்று நாட்டுத் தலையீட்டைத் தடுக்க ரஷ்யப் படையின் ஒரு நாட்டில் தற்போதைக்கு இருந்து வரும்.

வென்ஸஸ்லாஸ்சதுக்கத்திலிருந்து இன்று ரஷ்ய படைகள் வெளியேறின

மாஸ்கோவில் செக் நாட்டுத் தலைவர்களுக்கும் ரஷ்ய வார்ஸோ ராணுவ ஒப்பந்த நாடுகளின் தலைவர்களுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி அன்னிய படைகள் படிப்படியாக வெளியேறுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சில கட்டுப்பாடுகளுடன் முற்போக்குத் திட்டங்களை செயல்படுத்த செக் நாட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. செக் நாட்டின் உள்விவகாரங்களில் வீண் தலையீடுஇருக்க மாட்டாது எனவும் உடன்பாடு செய்துகொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## 533 பேர் உயிரிழந்தனர்

புதுடில்லி, ஆக. 27

இந்த வருடத்தில் நாட்டில் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் 533 பேர் உயிரிழந்தனர் என்றும் 3 லட்சம் வீடுகள் சேதமுற்றனவென்றும் இதனால் 170 கோடி ரூபாவரை நஷ்டம் ஏற்பட்டதாகவும் பாரத அரசாங்க அறிக்கையொன்று தெரிவிக்கின்றது.

## அவசரகாலச்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ழைப்புத்தரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

எதிர்க்கட்சி அமைத்தகரும் களுத்துறை எம்.பி.யுமான திரு. லெஸ்லி குணவர்த்தன டட்லி-செல்வநாயகம் ஒப்பந்தம்பற்றிய கேள்வியொன்றைக் கேட்ட போது எதிர்க்கட்சியினர் [illegible] ஒப்பந்தத்தின் [illegible] என இரித்துக்கொண்டே பதிலளித்தார்.

# எல்லாக்கோயில்களையும் திறந்துவிட என்னசெய்யலாம்?

## ஆலயப்பிரவேசக் குழு ஆராயும்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணக்குடாநாட்டிலுள்ள சில கோயில்களைச் சாதி, பேதமின்றி இந்துக்கள் அனைவருக்கும் வழிபாட்டிற்கு தாமதமின்றி திறந்துவிட என்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பது குறித்து ஆராய்வதற்கு ஆலயப் பிரவேசக்குழு இம்மாதம் 30-ம் திகதி யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் கூட்டமொன்றை நடாத்தவிருக்கிறது.

டாக்டர் வி. ரி. பசுபதி தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் திரு. இ. ரகுநாதன் ஜெ. பி., சுகாதார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. சி. பாலசிங்கம், உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம், மாவட்ட நீதிபதி திரு. எஸ். தம்பித்துரை, கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, முதலியார் எஸ். சின்னத்தம்பி, திரு. எம். வைரமுத்து செனட்டர் எஸ். நடராசா ஆகியோர் கலந்துகொள்வர். வரவேற்புரை திரு. எஸ். அம்பிகைபாகன் நிகழ்த்துவார். திரு. எஸ். பொன்னையா நன்றியுரை கூறுவார்.

# "டூப்ஜெக்குக்கு ஆதரவாக நூ அறிக்கைவிடவில்லை"

## சண்முகதாசன் கூறுகிறார்

வெள்ளவத்தை, செவ்.

"செக்கோஸ்லேவாக்கியாவிலுள்ள முற்போக்காளர்களுக்கு ஆதரவாக சீனாவின் சூ-என்-லாய் அறிக்கை விட்டது உண்மை. ஆனால் இது திரிக்கப்பட்டு செக். கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர் டூப்ஜெக்கின் ஆதரவாளர்களுக்குச் சாதகமாக அறிக்கைவிடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. டூப்ஜெக் ஜனநாயகம் என்று சொல்லுவது சோஷலிசத்திற்கெதிரான முதலாளித்துவப் புகுத்தலாகும். இந் நாட்டில் திரிபுவாதிகள் உள்ளவரை புரட்சிகர தொழிலாளவர்க்கம் தனது இலட்சியத்தை நிறைவேற்ற முடியாது. புரட்சிகர முற்போக்குவாதிகளுக்கு ஆதரவாகத்தான் நாங்கள் பேசி வருகின்றோம். பிற்போக்காளர்களை நாம் ஒருபோதும் ஆதரித்தது கிடையாது. இன, மத மொழி வேறுபாடுகளின்றி இலங்கையில் பாட்டாளி வர்க்கம் ஒன்றுபட வேண்டும்."

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிப் (பீகிங் சார்பு) பொதுச்செயலாளர் திரு. நா. சண்முகதாசன் பேசுகையில் கூறினார். இக் கூட்டம் யூனியன் பிளேஸில் நடைபெற்றது.

## செல்வச்சந்நிதிஆலய இன்றைய நிகழ்ச்சிகள்

வல்வெட்டித்துறை, புதன்

காலை: 6-30 மணிக்கு வசந்தமண்டப பூஜை. சுவாமி குதிரைவாகனத்தில் வலம் வருதல். இரவு: 6 மணிக்கு பூஜை ஆரம்பம். தொடர்ந்து சுவாமி கடா வாகனத்தில் வெளிவீதி எழுந்தருளல். 8 மணிக்கு அளவையூர் சி. [illegible]தம்பியின் 'பாலனாய் வந்த பழனியாண்டவன்' என்னும் விஷயம்பற்றி கதாப்பிரசங்கம்.


# 'ஈழநாடு'

(பிந்திய பதிப்பு)

1—9—68 தொடக்கம் யாழ்ப்பாண நகரில் நண்பகல் 12 மணிக்கும் 'ஈழநாடு' பிந்திய பதிப்பு வாசக நேயர்களுக்கு கிடைக்க ஒழுங்குசெய்யப் பட்டுள்ளதென்பதை அறிவித்துக்கொள்கிறோம்.

உடன் கிடைக்கும் உள்நாட்டு வெளிநாட்டுச் செய்திகளை உடனுக்குடன் வாசகர்களுக்கு தெரிவிக்கவே இந்த ஏற்பாட்டை செய்துள்ளோம்.

நண்பகலில் கிடைக்கும் 'ஈழநாடு' புதிய செய்திகளைத் தாங்கி வரும்.

காலையிலும் வழமை போல் 'ஈழநாடு' கிடைக்கும்.

பிரதி ஒன்று — 15 சதம்
பக்கங்கள் — 8



## திருமண அழைப்பு

மணமகன்: பாலசுப்பிரமணியம் (பாலமணி)
மணமகள்: கணேஸ்வரி

நிகழும் கீலகவருஷம் ஆவணித்திங்கள் 13-ம் நாள் வியாழக்கிழமை (29—8—68) காலை 9 மணி தொடக்கம் 10-00 மணிவரையிலுமுள்ள சுபநேரத்தில் நல்லூர் சிவன்கோவிலில் நடைபெறும் திருமண வைபவத்திற்கு நேரில் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

வணக்கம்

க. பொன்னுத்துரையும் குடும்பமும்

'அன்பே சிவம்'
[illegible] அன்னசத்திர லேன்,
[illegible]தர் மடம்
யாழ்ப்பாணம்.

949


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] கோவில் வீதி 6[illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org